# நம்மாழ்வார் அருளிச் செய்த
# திருவாய்மொழி
# நான்காம் பத்து

## ஒன்பதாம் திருவாய்மொழி - நண்ணாதார்
## ஆழ்வார் மாலுக்கு ஆட்செய்யாது துன்புறும் உயிர்களைக் கண்டு, கண் கலங்கி வெறுப்புற்று, தம்மைத் திருவடியில் சேர்த்துக் கொள்ளுமாறு எம்பெருமானை வேண்டுதல்

** நண்ணாதார் முறுவலிப்ப *
நல் உற்றார் கரைந்து ஏங்க *
எண்ணாராத் துயர் விளைக்கும் *
இவை என்ன உலகியற்கை? **
கண்ணாளா! கடல் கடைந்தாய்! *
உன கழற்கே வரும் பரிசு *
தண்ணாவாது அடியேனைப் *
பணி கண்டாய் சாம் ஆறே 1

சாம் ஆறும் கெடும் ஆறும் *
தமர் உற்றார் தலைத் தலைப்பெய்து *
ஏமாறிக் கிடந்து அலற்றும் *
இவை என்ன உலகியற்கை? **
ஆம் ஆறு ஒன்று அறியேன் நான் *
அரவணையாய்! அம்மானே! *
கூம் ஆறே விரை கண்டாய் *
அடியேனைக் குறிக்கொண்டே 2

கொண்டாட்டும் குலம் புனைவும் *
தமர் உற்றார் விழு நிதியும் *
வண்டார் பூங்குழலாளும் *
மனை ஒழிய உயிர் மாய்தல் **
கண்டு ஆற்றேன் உலகியற்கை *
கடல் வண்ணா! அடியேனை *
பண்டே போல் கருதாது *
உன் அடிக்கே கூய்ப் பணி கொள்ளே 3

கொள் என்று கிளர்ந்து எழுந்த *
பெருஞ்செல்வம் நெருப்பாக *
கொள் என்று தமம் மூடும் *
இவை என்ன உலகியற்கை? **
வள்ளலே! மணி வண்ணா! *
உன கழற்கே வரும் பரிசு *
வள்ளல் செய்து அடியேனை *
உனது அருளால் வாங்காயே 4

வாங்கு நீர் மலர் உலகில் *
நிற்பனவும் திரிவனவும் *
ஆங்கு உயிர்கள் பிறப்பு இறப்புப் *
பிணி மூப்பால் தகர்ப்பு உண்ணும் **
ஈங்கு இதன் மேல் வெந்நரகம் *
இவை என்ன உலகியற்கை? *
வாங்கு எனை நீ மணி வண்ணா! *
அடியேனை மறுக்கேலே 5

மறுக்கி வல்வலைப் படுத்திக் *
குமைத்திட்டுக் கொன்றுண்பர் *
அறப் பொருளை அறிந்து ஓரார் *
இவை என்ன உலகியற்கை? **
வெறித் துளவ முடியானே! *
வினையேனை உனக்கு அடிமை
அறக் கொண்டாய்! * இனி
என் ஆரமுதே! * கூய் அருளாயே 6

ஆயே! இவ்வுலகத்து *
நிற்பனவும் திரிவனவும் *
நீயே மற்றொரு பொருளும் *
இன்றி நீ நின்றமையால் **
நோயே மூப்பு பிறப்பு இறப்புப் *
பிணியே என்றிவை ஒழிய *
கூயே கொள் அடியேனைக் *
கொடு உலகம் காட்டேலே 7

காட்டி நீ கரந்து உமிழும் *
நிலம் நீர் தீ விசும்பு கால் *
ஈட்டி நீ வைத்து அமைத்த *
இமையோர் வாழ் தனி முட்டை **
கோட்டையினில் கழித்து * எனை உன்
கொழுஞ்சோதி உயரத்து *
கூட்டரிய திருவடிக்கள் *
எஞ்ஞான்று கூட்டுதியே? 8

கூட்டுதி நின் குரை கழல்கள் * இமையோரும்
தொழா வகை செய்து *
ஆட்டுதி நீ அரவணையாய்! *
அடியேனும் அஃது அறிவன் **
வேட்கை எல்லாம் விடுத்து * என்னை உன்
திருவடியே சுமந்து உழல *
கூட்டரிய திருவடிக்கள் *
கூட்டினை நான் கண்டேனே 9

கண்டு கேட்டு உற்று மோந்து
உண்டு உழலும் * ஐங்கருவி
கண்ட இன்பம் * தெரிவரிய
அளவில்லாச் சிற்றின்பம் **
ஒண்தொடியாள் திருமகளும் *
நீயுமே நிலா நிற்ப *
கண்ட சதிர் கண்டு ஒழிந்தேன் *
அடைந்தேன் உன் திருவடியே 10

** திருவடியை நாரணனைக் *
கேசவனைப் பரஞ்சுடரை *
திருவடி சேர்வது கருதிச் *
செழுங்குருகூர்ச் சடகோபன் **
திருவடி மேல் உரைத்த தமிழ் *
ஆயிரத்துள் இப்பத்தும் *
திருவடியே அடைவிக்கும் *
திருவடி சேர்ந்து ஒன்றுமினே 11

**ஆழ்வார் திருவடிகளே சரணம்**

---